# உறுதிப்படுத்தப்பட்ட பரிசோதனை என்றால் என்ன?

சில சமயங்களில் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். உங்கள் பரிசோதனையில் அப்படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உங்களுக்கு HPV தொற்று உள்ளதாக அர்த்தம்.

இது உங்களுக்குக் கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் உள்ளது என்பதைக் குறிக்கவில்லை.

எதிர்காலத்தில் உங்களுக்குக் கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் வரக்கூடிய அபாயம் இருக்கக்கூடும்.

உங்கள் மருத்துவரோ அல்லது செவிலியரோ அடுத்தது என்ன என்பதைப் பற்றி உங்களுடன் பேசுவார்.



**கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையை நான் எங்கே செய்ய முடியும்?**

- பொது மருத்துவர் (GP)
- குடும்பக் கட்டுப்பாடு NSW கிளினிக்
- பெண்கள் சுகாதார மையம்
- சிறப்பு மருத்துவர் (மகளிர் நோய் மருத்துவர்)

# கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயின் அறிகுறிகள் என்ன?

கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையானது கர்ப்பப்பைவாயில் HPV இருக்கிறதா என்பதை அது புற்றுநோயை ஏற்படுத்துவதற்கு முன்னர் கண்டறிகிறது.

கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையானது கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய்க்கான அறிகுறிகள் இல்லாத பெண்களுக்கானது.

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயின் சில அறிகுறிகள்:

- உடலுறவுக்குப் பிறகு யோனியிலிருந்து இரத்தப் போக்கு
- மாதவிலக்குக்கு இடைப்பட்ட காலங்களில் யோனியிலிருந்து இரத்தப் போக்கு
- மாதவிலக்கு முடிந்த காலத்துக்குப் பிறகு யோனியிலிருந்து இரத்தப் போக்கு
- யோனியிலிருந்து நீர் வெளியேற்றம்

உங்களுக்கு இத்தகைய அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், உங்களுக்கு கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் இருப்பதாக அர்த்தம் இல்லை. உங்களுக்கு இந்த அறிகுறிகள் இருந்தால், உங்கள் அடுத்த கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை வரை காத்திருக்கக் கூடாது. நீங்கள் உங்கள் மருத்துவரை உடனடியாகப் பார்க்க வேண்டும்.

**வெளியேற்றம்** என்பது ஒரு பெண்ணின் யோனியிலிருந்து வெளியே வரும் திரவமாகும்.


# தேசியப் புற்றுநோய் பரிசோதனைப் பதிவேடு

ஆஸ்திரேலியாவில் ஒரு புதிய புற்றுநோய் பரிசோதனைப் பதிவேடு உள்ளது.

தேசியப் புற்றுநோய் பரிசோதனைப் பதிவேடு பெண்களுக்குக் கடிதங்களை அனுப்புகிறது. நீங்கள் உங்கள் அடுத்த கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையை எப்போது செய்யவேண்டும் என்பதை அந்தக் கடிதங்கள் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றன.

**மேலதிக விவரங்களுக்கு**, www.fpnsw.org.au/know-your-health-cervical-screening என்ற எங்கள் இணையதளத்துக்குச் செல்லுங்கள் அல்லது குடும்பக் கட்டுப்பாடு NSW Talkline-யை 1300 658 886 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கவும் அல்லது www.fpnsw.org.au/talkline என்ற வலைத்தளத்துக்குச் செல்லவும்.

உங்கள் மொழியில் ஒருவரிடம் பேசுவதற்கு, மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவையை (TIS) 131 450 என்ற எண்ணில் அழைக்கவும். அவர்களிடம் குடும்பக் கட்டுப்பாடு NSW—உடன் இணைப்பு கொடுக்குமாறு கேட்கவும்.



Tamil

# உங்கள் ஆரோக்கியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

family planning nsw
Reproductive & Sexual Health




# கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை

NSW GOVERNMENT

Cancer Institute NSW

# கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் என்றால் என்ன?




நமது உடல்கள் பல லட்சக்கணக்கான செல்களால் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நாளும் புதிய செல்கள் வளர்கின்றன.

சில சமயங்களில் செல்கள் வித்தியாசமாக வளரும்போது, அவை புற்றுநோயாக மாறக்கூடும்.

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் என்பது கர்ப்பப்பைவாயில் வளரும் புற்றுநோயாகும்.

கர்ப்பப்பைவாய் என்பது உடலுக்குள்ளே யோனியின் மேல்பகுதியில் உள்ளது.

# கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் என்பது எதனால் ஏற்படுகிறது?

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயானது மனித பாப்பிலோமா நுண்ணியிரியினால் ஏற்படுகிறது. மனித பாப்பிலோமா நுண்ணியிரி சில சமயங்களில் HPV என்று அழைக்கப்படுகிறது.

HPV-இல் பலவகைகள் உள்ளன. பெண்களும், ஆண்களும் HPV தொற்றைப் பெற முடியும். HPV சர்வ சாதாரணமாகப் பரவிடும் தொற்றாகும். பாலியல் தொடர்பில் உள்ள எவரும் HPV தொற்றைக் கொண்டிருக்க முடியும்.

HPV பொதுவாக எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லாமல் தானே சரியாகிக் கொள்ளும். சில சமயங்களில் HPV உங்கள் கர்ப்பப்பைவாயில் உள்ள செல்களை மாற்றக்கூடும். இந்த மாற்றங்கள் புற்றுநோயாக மாறக்கூடும். இந்த மாற்றங்கள் மிக மெதுவாக நடக்கும்.

இந்த மாற்றங்கள் புற்றுநோயாக மாற 15 ஆண்டுகள் வரை ஆகலாம். சில சமயங்களில் இந்த மாற்றங்கள் புற்றுநோயாக மாறவே மாறாது. உங்கள் கர்ப்பப்பைவாயில் HPV உள்ளதா என்பதை அறிய ஒரு பரிசோதனை செய்து கொள்ளலாம்.

பாலியல் தொடர்பு என்பது பின்வரும் தோலோடு தோல் தொடர்புடைய:

- ஒரு நபரின் பிறப்புறுப்பு மற்றும் மற்றொரு நபரின் பிறப்புறுப்புக்கு இடையேயானது அல்லது
- பிறப்புறுப்பு மற்றும் வாய் மற்றும் மலத்துவாரம் போன்ற பிற உடல் பாகங்கள் இடையேயானது

பிறப்புறுப்புகள் சில சமயங்களில் 'அந்தரங்க உறுப்புகள்' என்று அழைக்கப்படும். பிறப்புறுப்புகள் என்பவை:

- ஆண்குறி
- பெண்குறியின் வெளிப்பகுதி மற்றும் யோனி

# புதிய கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை

ஆஸ்திரேலியாவில் ஒரு புதிய பரிசோதனை உள்ளது. அது கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை என்று அழைக்கப்படுகிறது.

கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையானது கர்ப்பப்பைவாயில் HPV உள்ளதா என்பதைக் கண்டறியும். Pap பரிசோதனைக்கு மாற்றாக கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை உள்ளது.

நீங்கள் இப்போது Pap பரிசோதனைக்குப் பதிலாக கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையைச் செய்யலாம். கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையானது செல் மாற்றங்களை, அவை புற்றுநோயாக மாறுவதற்கு முன்னரே, கண்டறிய உதவக்கூடும்.

## கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனை யார் அவசியம் செய்யவேண்டும்?

பாலியல் தொடர்பில் உள்ள 25 முதல் 74 வயதிற்குட்பட்ட பெண்கள் இந்தப் பரிசோதனையைச் செய்ய வேண்டும்.

இளம் பெண்களுக்குத் தங்கள் 25-ஆவது பிறந்த நாளை ஒட்டிய காலக்கட்டத்தில் முதல் பரிசோதனை அவசியம் இருக்க வேண்டும்.

## கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையை நான் எப்போது செய்யவேண்டும்?

- 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீங்கள் பரிசோதனை அவசியம் செய்ய வேண்டும்.
- நீங்கள் Pap பரிசோதனையை டிசம்பர் 2017-க்கு முன்னர் செய்திருந்தால், உங்கள் அடுத்த பரிசோதனை நீங்கள் கடைசியாக செய்த Pap பரிசோதனைக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இருக்கும்.
- நீங்கள் Pap பரிசோதனையை டிசம்பர் 2017-க்குப் பின்னர் செய்திருந்தால், உங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசோதனை இருக்கும்.

# கர்ப்பப்பைவாய்ப் பரிசோதனையை நான் எப்போது செய்யவேண்டும்?

மருத்துவரோ அல்லது செவிலியரோ உங்கள் இடுப்புக்குக் கீழே இருக்கும் ஆடைகளை நீக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்வார்.

நீங்கள் ஒரு நீண்ட அங்கியைத் தேர்வு செய்து அணிந்து கொள்ளலாம். இதனால் நீங்கள் உங்கள் ஆடைகளை நீக்குவதற்குப் பதிலாக அங்கியை உயர்த்திக் கொள்ள முடியும்.

நீங்கள் பரிசோதனைப் படுக்கையில் படுக்க வேண்டும். உங்கள் கால்களை உயர்த்தி முழங்கால்களை மடக்கவேண்டும்.

மருத்துவரோ அல்லது செவிலியரோ சிறப்புக் கருவிகளைப் பயன்படுத்தி உங்கள் கர்ப்பப்பைவாய்ப் பகுதியிலிருந்து சில செல்களை எடுப்பார்.

அந்த செல்கள் பரிசோதனைக்காக ஆய்வகத்துக்கு அனுப்பப்படும்.

உங்கள் பரிசோதனை முடிவுகள் திரும்பி வந்தபின் மருத்துவரோ அல்லது செவிலியரோ உங்களை அழைக்கக்கூடும்.

உங்கள் பரிசோதனை முடிவுகளை கடிதம் மூலமும் நீங்கள் பெறலாம்.

